சுடர் ஒளி
THE SUDAR OLI
සුඩර් ඔළි
22.10.2020 வியாழக்கிழமை

**புதினம் தெரியுமோ?**

நாடாளுமன்றம் என்பது ஒரு நாட்டின் அதி உன்னத சபை. வெறும் சட்டங்களை ஆக்கு வதும் கொள்கைகளை வகுப் பதும் மட்டும் நாடாளுமன் றப் பிரதிநிதிகளின் கடமை அல்ல. அதன் 2



# சமூக தொற்று அபாயம்

## சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஒக்ரோபர் 22

இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கம் சமூகப்பரவல் என்ற அபாய கட்டத்துக்கு வந்துவிட்டது என்று பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத் தின் தலைவர் உபுதல் ரோஹண இன்று தெரிவித்தார். 2

## தென்பகுதிப் பணியாளர்களால் முல்லைத்தீவில் அச்சநிலைமை!

முல்லைத்தீவு, ஒக். 22

முல்லைத்தீவு மாவட்டத்தில் வீதி அபிவி ருத்திப் பணிகளில் ஈடுபட்டுள்ள தென்பகு திப் பணியார்களால் அந்தப் பகுதி மக்கள் அச்சமான சூழலில் வாழவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்படு கின்றது. நெடுங்கேணியில் வீதி அபிவிருத்திப் பணியில் ஈடுபட்ட 2

## கொழும்பின் சில பகுதிகள் இன்று முடக்கம்

கொழும்பு, ஒக். 22

கொரோனாப் பெருந்தொற்றின் கொத்தணிப் பரவல்கள் இனங்கா ணப்பட்டதை அடுத்து கொழும் பின் சில இடங்கள் இன்று முடக்கப்பட்டுள்ளன. 2

## சஹ்ரானின் மனைவி இன்று ஆணைக்குழுவில் சாட்சியம்!

கொழும்பு, ஒக். 22

உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல்கள் குறித்து விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழு வில் தாக்குதல்தாரியான சஹ்ரானின் மனைவி இன்று முதல்முறை யாக முன்னிலையாகி 2

# பணிந்தனர் பங்காளிகள்!

## கோத்தாவின் உறுதிமொழியையடுத்து '20'இற்கு ஆமாம்சாமி போட முடிவு!!

கொழும்பு, ஒக். 22

'இரட்டைக் குடியுரிமை கொண்ட வர்கள் தேர்தலில் போட்டியிடுவ தற்கும் அரச துறையில் நிறைவேற் றுப் பதவிகளை வகிப்பதற்கும் புதிய அரசமைப்பு ஊடாக நிச்சயம் தடை விதிக்கப்படும் என்ற உறுதிமொழியை ஜனாதி பதி கோத்தாபய ராஜபக்ச வழங்கியுள்ளார். எனவே, அவர்மீது நம்பிக்கைவைத்து 2



## முல்லை மீனவர்களுக்கு பேலியகொட மீன்சந்தையுடன் தொடர்பா?

முல்லைத்தீவு, ஒக். 22

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடற்கரை பகுதியில் உள்ள மீன் ஏற்றுமதி வியாபாரிகளின் கூலர் வாகனங்கள் அண்மைக்கால மாக பேலியாகொட மீன்சந்தைக்குச் சென்றுவந் துள்ளன. இதனால் அவர்க ளிடம் பி.சி.ஆர் சோத 2



## எவருக்கும் தொற்றில்லை

கிளிநொச்சி, ஒக். 22

கிளிநொச்சியில் தங்கியிருந்த 30 பேரினது மாதிரிகள் சோதனைக்குட்படுத்தப் பட்டதில் எவருக்கும் கொரோனாத் தொற்று 2

## '20'ஐ ஆதரிப்போர் வெளியேற்றப்படுவர்

### ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, ஒக். 22

20ஆவது திருத்தத்தை ஆதரிக்கும் கட்சி உறுப்பினர்கள் கட்சியி லிருந்து வெளியேற்றப்ப டுவார்கள் என ஐக்கிய மக்கள் சக்தி எச்சரிக்கை விடுத்துள்ளது. இன்று காலை நடந்த கட்சிக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எட்டப்பட் டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் சிலரு டன் அரசின் உயர் மட்டத்தினர் இரகசியப் பேரங்களை நடத்திய தாக வெளியான தகவல்

## புதிய அரசமைப்பை இயற்றும் பணி ஆரம்பம்

### 6 மாதங்களுக்குள் நிபுணர்கள் குழுவின் அறிக்கை கிடைக்கும் என்கிறார் பீரிஸ்

கொழும்பு, ஒக். 22

புதியதொரு அரசமைப்பை இயற்றுவதற்கான பணி ஆரம்பமாகிவிட்டது. '20'ஆவது திருத்தம் மூலம் தற்காலிக ஏற்பாடு மாத்திரமே, முழுமையான தொரு அரசமைப்பு நிச்சயம் உருவாக்கப்படும் 2

## வெளிமாவட்ட மீனவர்கள் பரு. மீனவர்கள்மீது தாக்குதல்!

வடமராட்சி, ஒக். 22

பருத்தித்துறை கடற்பகுதியில் வைத்து, பருத்தித்துறை மீனவர் கள் இருவர் வெளிமாவட்ட மீனவர்களால் தாக்கப்பட்டுள்ள னர் என்று பொலிஸில் முறைப் பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது. இன்று அதிகாலை இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள் ளது. பருத்தித்துறை 2

## நெடுங்கேணியில் மேலும் இருவருக்கு கொரோனோ

வவுனியா, ஒக். 22

வவுனியா வடக்கில் வீதி அபிவிருத் திப் பணிகளில் ஈடுபட்டுவரும் பிரபல நிறுவனத்தைச் சேர்ந்த மூன்று பணியாளர்களுக்கு கொரோ னாத் தொற்று ஏற்கனவே உறுதிப் படுத்தப்பட்டிருந்த நிலையில், மேலும் இருவர் கொரோனா 2

## குளவி கொட்டி விவசாயி பலி!

முல்லைத்தீவு, ஒக். 22

முல்லைத்தீவு விசுவ மடு புத்தடிப்பகுதியில் குள வியால் கொட்டப் 2

சுட்டெரிக்கும் உண்மைகளை சுமந்து வரும் மாலை இதழ்

புதினம் தெரியுமோ

## நெடுங்கேணியில்...

வால் பாதிக்கப்பட்டுள்ளனர்.
தெற்கைச் சேர்ந்த குறித்த ஒப்பந்த நிறுவனம் வவுனியா வடக்கின் பல்வேறு பகுதிகளில் வீதி திருத்தும் பணியில் ஈடுபட்டு வருகின்றது. அங்கு பணியாற்றும் 27 பேருக்கு வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையால் பி.சி.ஆர் பரிசோதனைகள் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இதில் மூவருக்குத் தொற்று இருப்பது நேற்றுமுன்தினம் உறுதிப்படுத்தப்பட்ட நிலையில், மேலும் 82 பேருக்கு பி.சி.ஆர் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.
இதையடுத்தே மேலும் இரு பணியாளர்கள் கொரோனாத் தொற்றுக்கு உட்பட்டுள்ளமை தெரியவந்தது. (ம-18,26,110)

## குளவி கொட்டி...

பட்டு விவசாயி ஒருவர் உயிரி ழந்தார்.
56 வயதுடைய இராமசாமி நடேசஐயர் என்ற விவசாயியே உயிரி ழந்தவராவார்.
குளவியால் கொட்டப் பட்டு மயக்கமடைந்த விவசாயி மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும்போதே உயிரிழந்தார். (ம19)

## தென்பகுதிப் பணியாளர்களால்..

மூவருக்குக் கொரோனாத் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது. இந்த நிலையிலேயே முல்லைத்தீவில் வீதி அபிவிருத்திப் பணியில் ஈடுபடும் தென்பகுதிப் பணியாளர்கள் தொடர்பில் அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. (ம-இ)

## சஹ்ரானின்...

சாட்சியம் வழங்கினார். 2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதல்களில் பலர் கொல்லப்பட்டனர். இந்தத் தாக்குதல்கள் குறித்து ஜனாதிபதி ஆணைக்குழு தற்போது விசாரணை நடத்தி வருகின்றது. இந்த நிலையிலேயே அந்த ஆணைக்குழுவில் முதன்முறையாகச் சாட்சியம் வழங்கியுள்ளார் ஸஹ்ரானின் மனைவி. (ம-இ)

## வெளிமாவட்டத்தின்...

மீனவர்களைத் தாக்கியது மட்டுமில்லாமல் சுமார் 5 மணிநேரம் கடலில் அவர்களை மறித்து வைத்திருந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-26)

## புதிய அரசமைப்பை...

என்று சட்டத்துறை பேராசிரியரும் அமைச்சருமான ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் இன்று நடைபெற்ற அரசமைப்பின் 20ஆவது திருத்தம் தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
'அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தின் பிரகாரம் சுயாதீன ஆணைக்குமுக்கள் அமைக்கப்பட்டன. தேர்தல் ஆணைக்குழுவிலுள்ள உறுப்பினர் ஒருவர் பக்கச்சார்பான முறையில் செயற்பட்டார். அவரிடம் சுயாதீனம் இருக்கவில்லை. தேர்தலை நடத்தவேண்டிய இடத்தில் இருந்துக் கொண்டு தேர்தலுக்கு எதிராக நீதிமன்றம் சென்றார். இவ்வாறு 19இல் பல குறைபாடுகள் உள்ளன. அச்சட்டம் மக்களின் நம்பிக்கையை இழந்துவிட்டது.
ஜே.ஆர்.ஜயவர்தன ஆட்சிகாலத்தில் கொண்டுவரப்பட்ட அரசமைப்பு இந்த நாட்டில் 42 வருடங்களாக அமுலில் உள்ளது. அரசமைப்பு என்பது கல்வெட்டு அல்ல, காலவோட்டத்துக்கேற்ப சமூகத்தின் வளர்ச்சிக்கேற்ப அது மாற்றியமைக்கப்படவேண்டும்.
அந்தவகையில் புதிய அரசியலமைப்பை இயற்றுவதற்கான சட்டமூலத்தை தயாரிப்பதற்காக 9 பேரடங்கிய நிபுணர் குழுவை அமைத்துள்ளோம். அக்குழுவின் பணிகள் ஆரம்பமாகியுள்ளன. 6 மாதங்களுக்குள் வரைவு நகலை வழங்குவதாக குழுவின் தலைவர் அறிவித்துள்ளார்.
எனவே, 20 என்பது தற்காலிக ஏற்பாடு, அதனை ஒத்திவைக்கமுடியாது.
அரசியலமைப்பு மறுசீரமைப்புக்கான ஆரம்பமாகக்கூட எடுத்துக் கொள்ளலாம். முழுமையானதொரு அரசியலமைப்பு நிச்சயம் உருவாக்கப்படும்' என்றார். (ம-44)

# சமூக...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
"திவுலப்பிட்டிய பகுதியில் கடந்த 2ஆம் திகதியே கொரோனாத் தொற்றாளர் ஒருவர் அடையாளம் காணப்பட்டார். அதன்பின்னர் நாட்டில் நேற்றிரவுவரை குளியாப்பிட்டிய, கட்டுநாயக்க வர்த்தக வலயம், மத்துகம மற்றும் பேலியகொட மீன் சந்தை என நான்கு உப கொத்தணி பரவல்கள் ஏற்பட்டுள்ளன.
எதிர்காலத்திலும் இவ்வாறான உப கொத்தணிப் பரவல்கள் ஏற்படக்கூடிய அபாயம் அதிகமாகவே இருக்கின்றது.
சமூகப் பரவல் என்ற அபாய கட்டத்திலேயே நாம் இருக்கின்றோம். பேலியகொட மீன் சந்தையில் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதையடுத்து சமூகத்தொற்றை நோக்கி பயணிக்கின்றோம் என்பதற்கான காரணங்கள் வெளிவருகின்றன.
2ஆவது அலைக்கான ஆரம்பப் புள்ளி இன்னும் கண்டறியப்படவில்லை. மினுவாங்கொட கொத்தணிப் பரவல் ஏற்படுவதற்கு முன்னரே குளியாப்பிட்டிய பகுதியில் திருமண நிகழ்வு நடைபெற்றுள்ளது. அதில் பங்கேற்றவர்களுக்கு வைரஸ் தொற்றியுள்ளது. அப்படியானால் சமூகதொற்று முன்னரே இருந்துள்ளதா என்ற சந்தேகமும் எழுகின்றது. பேலியகொட மீன் சந்தையில் ஏதேச்சையாகவே பிசி.ஆர் பரிசோதனை நடத்தப்பட்டுள்ளது. அதன்போதே பலருக்கு வைரஸ் தொற்றிருப்பது உறுதிப்படுத்தப்பட்டது.
ஏனைய பகுதிகளிலும் இவ்வாறு இருக்கலாம். எனவே, பி.சி.ஆர். பரிசோதனைகள் அதிகரிக்கப்படவேண்டும். அதேவேளை, முதலாவது அலையை அனைவரும் ஒன்றிணைத்து கட்டுப்படுத்தினோம். ஆனால் தற்போது நிர்வாக ரீதியில் பல சிக்கல்கள், தடங்கல்கள் உள்ளன. அவை நிவர்த்தி செய்யப்படவேண்டும்" என்றார். (ம44)

## பேலியகொட...

னைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
பேலியகொட மீன்சந்தையில் பணியாற்றும் 49 பேருக்குக் கொரோனாத் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதை அடுத்தே மேற்படி சந்தையுடன் வர்த்தகத் தொடர்பைப் பேணிய முல்லைத்தீவு மீன வர்கள் தொடர்பில் அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. (ம-19)

## எவருக்கும்...

இல்லை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைத் தகவல்கள் தெரிவிக்கின்றன
கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் வீதி அபிவிருத்தி பணிகளுக்காக வருகை தந்திருந்த வெளிமாவட்டத்தை சேர்ந்த 30 பேருக்கு முதல் கட்டமாக இவ்வாறு பரிசோதனை இடம்பெற்றுள்ளது.
தர்மபுரத்தில் அமைந்துள்ள மாகா நிறுவனத்தில் தொழிலின் நிமித்தம் வருகை தந்து தங்கியுள்ள 30 பேருக்கே இவ்வாறு கடந்த திங்கட்கிழமை மாதிரிகள் பெற்றுக் கொள்ளப்பட்டு பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டன. குறித்த மாதிரிகளில் எவருக்கும் தொற்று இல்லை நேற்றுமுன்தினம் தெரிவிக்கப்பட்டது. (ம-6)

## '20'ஐ ஆதரிப்போர்...

களையடுத்தே இந்த முடிவை இன்று காலை அவசரமாகக் கூடிய கட்சி எடுத்துள்ளது.
இருபதாவது திருத்தத்திற்கு ஆதரவைத் தெரிவித்து வாக்களிக்கவுள்ளதாகக் கூறப்படும் நாடாளுமன்ற உறுப்பினர் டயானா இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-இ)

மாண்பை, மகத்துவத்தைப் பேணுவதும் கூட நாடாளுமன்றப் பிரதிநிதிகளின் தலையாய கடமை. ஆனால் இலங்கை நாடாளுமன்றம் இவை எல்லாவற்றில் இருந்தும் விதிவிலக்காக ஆகிவிட்டது.
நாடாளுமன்றத்தில் சுகாதார நடைமுறைகள் பின்பற்றத் தேவையில்லை என்று சுகாதார அமைச்சர் தெரிவித்து 24 மணிநேரத்துக்குள் மற்றொரு அவமதிப்பை நிகழ்த்தியுள்ளார் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன.
நாடாளுமன்றத்தின் நேற்றுமுன்தின அமர்வில் சபா பீடத்தில் இருந்தவாறு அவர் அலைபேசியில் உரையாடியுள்ளார்.
நாடாளுமன்றத்தின் சபாபீடத்தில் இருக்கையில் அலைபேசி அழைப்பு வருகின்றது என்றால் சபாநாயகர்கள் அதை புறக்கணிப்பர். இன்னியமையாத விடயம் என்றால் சபாபீடத்தை விட்டு வெளியேறிச் சென்று உரையாடிவிட்டு மீண்டும் வருவார்கள். ஆனால் இருந்த இடத்தில் இருந்து சபாபீடத்தை அவமதித்துள்ளார் சபாநாயகர். இனி நாடாளுமன்றில் ஏனைய அவமதிப்புக்களை அவர் எவ்வாறு கையாளப்போகின்றார்?
அவ்வாறு கையாளுவதற்கான அதாவது நாடாளுமன்ற அவமதிப்புக்களை எதிர்த்துக் கேள்வி கேட்பதற்கான அருகதை அவருக்கு உள்ளதா? என்பதே தற்போதுள்ள கேள்விகள். – பட்சி

## கொழும்பின்...

இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரால் சவேந்திர சில்வா இதனை தெரிவித்துள்ளார்.
மட்டக்குளி, புளுமெண்டல், கிரேண்பாஸ், மோதர மற்றும் வெல்லம்பிட்டி ஆகிய பகுதிகளுக்கே இவ்வாறு ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் திங்கட்கிழமை முதல் இந்த ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கொத்தணிப் பரவல்கள் மேலும் பரவலடையலாம் என்ற அச்சத்திலேயே கொழும்பின் மேற்படிப் பகுதிகள் முடக்கப்பட்டுள்ளன. (மஇ)

# பணிந்தனர்...

20ஆவது திருத்தத்தை முழுமையாக ஆதரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று ஆளுங்கூட்டணியின் அங்கம் வகிக்கும் பங்காளிக்கட்சிகள் கூட்டாக அறிவித்துள்ளன. கொழும்பில் இன்று நடைபெற்ற கூட்டு ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்படி கட்சிகளின் தலைவர்களால் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டது.
தேசிய சுதந்திர முன்னணி, பிவிதுரு ஹெல உறுமய, ஜனநாயக இடதுசாரி முன்னணி, லங்கா சமாமஜக்கட்சி, இலங்கை கம்யூனிஸ்கட்சி ஆகியவற்றின் பிரதிநிதிகள் குறித்த ஊடகவியலாளர் மாநாட்டில் பங்கேற்றிருந்தனர். இதன்போது கருத்து வெளியிட்ட அமைச்சர் விமல்வீரவன்ஸ கூறியவை வருமாறு,
'அரசமைப்பின் 20ஆவது திருத்தம் தொடர்பில் எம்மால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளில் 90 சதவீதமானவை ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. எனினும், இரட்டைக் குடியுரிமை குறித்து விடுக்கப்பட்ட வேண்டுகோள் பரிசிலினை மட்டத்தில் இருந்தது. இதனால் 20 ஆவது திருத்தச்சட்டவரைவுக்கு ஆதரவாக வாக்களித்தாலும் மேற்படி ஒரு சரத்தை எதிர்ப்பதற்கு முன்னதாக தீர்மானித்திருந்தோம்.
இந்த நிலையில் எம்மை அழைத்து இவ்விவகாரம் தொடர்பில் பேச்சு நடத்திய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, 2021ஆம் ஆண்டுக்குள் புதிய அரசமைப்பு உருவாக்கப்படும் என்றும் அதன்போது இரட்டைக் குடியுரிமைக் கொண்டவர்கள் தேர்தலில் போட்டியிடுவதற்கும், நிறைவேற்று பதவிகளை வகிப்பதற்கும் தடை விதிக்கும் ஏற்பாடு நிச்சயம் உள்ளடக்கப்படும் என்றும் உறுதியளித்தார். '20'ஆவது திருத்தச்சட்டவரைவு தொடர்பில் இன்று இரவு பதிலளித்து உரையாற்றும்போது நீதி அமைச்சர் அலி சப்ரியால் இது தொடர்பில் சபைக்கு அறிவிக்கப்படும் என்ற உத்தரவாதமும் வழங்கப்பட்டது.
எனவே, ஜனாதிபதிமீது நம்பிக்கை வைத்து, அவர் சொல்வதைச் செய்யும் தலைவர் என்பதால் 20இற்கு முழுமையான ஆதரவு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது. எனினும், இரட்டைக் குடியுரிமை கொண்டவர்கள் நாடாளுமன்றம் வருவதற்கு கொள்கை ரீதியில் நாம் இன்னும் எதிர்ப்பு நிலைப்பாட்டிலேயே இருக்கின்றோம்.' என்றார். (ம44)

## தேசிய பாதுகாப்பின் உறுதியற்றதன்மையே ஈஸ்டர் தாக்குதலுக்கு மூல காரணம்

*எம்.பி எஸ்.பி. திசாநாயக்க குற்றச்சாட்டு*



கொழும்பு, ஒக்.22

நல்லாட்சி அரசாங்கத்தில் நாட்டின் தேசிய பாதுகாப்பு தொடர்பில் ஏற்பட்ட உறுதியற்ற தன்மை காரணமாகவே ஈஸ்டர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இன்று இடம்பெற்ற அரசமைப்பின் 20ஆவது திருத்த சட்ட வரைவு மீதான விவாதத்தில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில்தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், "நல்லாட்சி அரசாங்கத்தில் ஜனாதிபதியிடம் ஒரு சில அதிகாரங்களும் பிரதமரிடம் ஒரு சில அதிகாரங்களும் காணப்பட்டன. ஏனைய சில விடயங்கள் ஆணைக்குழுக்கள் வசம் காணப்பட்டன. ஜனாதிபதியும் பிரதமரும் முரண்பட்ட நிலைமையிலேயே செயற்பட்டனர். இதனால் தேசிய பாதுகாப்பு தொடர்பில் ஏற்பட்ட உறுதியற்றதன்மையாலேயே உலகில் எங்கோ ஒரு நாட்டில் மேற்கொள்ளப்படவிருந்த பயங்கர வாதத் தாக்குதல் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டதற்கான காரணியாக அமைந்துள்ளது" எனக் குறிப்பிட்டுள்ளார். (ந-இ)

## கொலையில் முடிந்தது வாய்த்தர்க்கம்

கொழும்பு, ஒக்.22

இருநபர்களுக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கொலையில் முடிவுற்றுள்ளது. ராகமை பொதுச் சந்தை வளாகத்தில் இருவருக்கிடையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. அது நீண்டு தகராறாக மாறியது. அதன்போது ஒருவர் மற்றையவர் மீது கூரிய ஆயுதத்தால் தாக்கியுள்ளார். தாக்குதலில் படுகாயமடைந்த நபர் ராகமை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் 23 வயதுடைய கந்தானை பிரதேசத்தை சேர்ந்த இளைஞன் எனத் தெரியவருகிறது. சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், ராகம பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (வ-இ)

# களுத்துறையில் 6 கிராமங்களுக்கு பூட்டு

களுத்துறை, ஒக்.22

களுத்துறை மாவட்டத்தில் 6 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்ட கிராமங்களாக இன்று அறிவிக்கப்பட்டுள்ளன.

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் களுத்துறை மாவட்டத்தில் பின்வரும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் மீண்டும் அறிவிக்கும் வரையில் தனிமைப்படுத்தப்பட்ட கிராமங்களாக பெயரிடப்பட்டிருக்கின்றன என கொவிட் 19 தொற்றுப் பரவலைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு மையம் அறிவித்துள்ளது.

இதனடிப்படையில் அகலவத்த பிரதேச செயலக பிரிவில் அகலவத்த, கோரக்கொட, பெரகம, தாபிலிகொட, கெகுலண்தர வடக்கு ஆகிய கிராமங்களும் பாலிந்த நுவர பிரதேச செயலக பரிவில் பெல்லன கிராமமும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-இ)

## காலமானார் முன்னாள் எம்.பி

வவுனியா, ஒக்.22



வன்னி மாவட்டத்தின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் கே.பாலச்சந்திரன் இன்று மாரடைப்புக் காரணமாக உயிரிழந்துள்ளார். 1951 ஆம் ஆண்டு பிறந்த இவர் தனது 69 ஆவது வயதில் காலமானார். இவர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், இன்று அதிகாலை 2.30 மணியளவில் உயிரிழந்துள்ளார்.

1994 முதல் 2000 ஆம் ஆண்டு வரை தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் சார்பாக வன்னி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த கே. பாலச்சந்திரன் கண்டியை பிறப்பிடமாக கொண்டவராவார்.

வவுனியாவில் வசித்து வந்த இவர் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த காலப்பகுதியில் வவுனியாவில் பல்வேறு அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற-110)



## அனுமதியின்றி மணல் அகழ்ந்த ஐவர் கைது!

மன்னார், ஒக்.22

மன்னார் இலுப்பைக்கடவைப் பகுதியில் அனுமதியின்றி மணல் அகழ்ந்த குற்றச்சாட்டில் ஐந்து பேர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இதன்போது மணல் ஏற்றிய ஐந்து வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய மன்னார் இலுப்பைக்கடவைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கூராய் ஆற்றுப் பகுதியில் இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

மன்னார் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பந்துல வீரசிங்கவின் பணிப்பின் பெயரில் மன்னார் மாவட்ட குற்றப்புலனாய்வு அதிகாரி ப.சஞ்சீவ ராஜபக்ச தலைமையிலான குழுவினரே இவர்களைக் கைதுசெய்தனர். (ற-213)

## தண்ணீரை பகிர்ந்த இருவருக்கு வழக்கு

கொழும்பு,ஒக்.22

கடமையிலிருந்தபோது, தண்ணீர் பகிர்ந்து பருகிய பொலிஸ் அதிகாரியொருவருக்கும், சிவில் பாதுகாப்புப் பெண் அதிகாரி ஒருவருக்கும் எதிராக, சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பாணந்துறை நீதிமன்ற வளாகத்தில் பாதுகாப்புக் காவலரணில் கடமையிலிருந்த இருவருக்கு எதிராகவே சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ் இருவருக்கும் எதிராக தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடரப்படும். ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகாரிகள் இருவரும் ஒரு போத்தல் தண்ணீரைப் பகிர்ந்து அருந்தியமையாலேயே, இவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

# மட்டக்களப்பு வைத்தியசாலைகளில் 212 கொரோனாத் தொற்றாளர்கள்

மட்டக்களப்பு, ஒக்.22

மட்டக்களப்பில் கரடியனாறு மற்றும் காத்தான்குடி வைத்தியசாலைகளில் கொரோனாத் தொற்று கண்டறியப்பட்ட 212 பேர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர் என கிழக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் வைத்தியர் ஏ.லதாகரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில், " மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனாத் தொற்று நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கும் வைத்தியசாலைகளாக கரடியானாறு மற்றும் காத்தான்குடி வைத்தியசாலைகள் மாற்றப்பட்டுள்ளன. இதனடிப்படையில், தெரிவு செய்யப்பட்ட வைத்தியசாலைகளில் புனர்நிர்மாண வேலைகள் இடம்பெற்று வருகின்றன. இந்நிலையில், ஏற்கனவே வைரஸ் தொற்று சிகிச்சைக்காக மாற்றப்பட்டுள்ள காத்தான்குடி வைத்தியசாலையில் 170 பேர் மற்றும், கரடியனாறு வைத்தியசாலையில் பேலியகொட மீன் சந்தையில் அடையாளம் காணப்பட்ட 42 பேர் உட்பட இரு வைத்தியசாலைகளிலும் 212 பேர் நேற்றிரவு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதேவேளை, பேலியகொட மீன் சந்தைப் பகுதிக்குச் சென்ற கல்முனை மட்டக்களப்பு பகுதிகளைச் சேர்ந்த மீன் வியாபாரிகளை அடையாளம் கண்டு அவர்களை தனிமைப்படுத்தும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், பேலியகொட மீன் சந்தைப் பகுதிக்குச் சென்றவர்கள் யாராவது இருப்பின் அவர்கள் தொடர்பாக பொது சுகாதாரப் பிரிவு மற்றும் பொலிஸாருக்கு தகவல் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார். (ந-இ)

## 55 ஆயிரத்து 73 பேருக்கு தனிமை நிறைவேற்றம்

கொழும்பு, ஒக்.22

தனிமைப்படுத்தல் நிலையங்களிலிருந்து, இதுவரை 55 ஆயிரத்து 73 பேர் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

76 தனிமைப்படுத்தல் நிலையங்களில், 8 ஆயிரத்து 623 பேர் தொடர்ந்தும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். 2 ஆயிரத்து 464 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். அத்துடன், 356 பேர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியிருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் தொடர்ந்தும் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். இந்த நிலையில் நாடளாவிய ரீதியில் இதுவரை 4 இலட்சத்து 6 ஆயிரத்து 466 பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னடுக்கப்பட்டுள்ளன. (ந-இ)

# இறங்குதுறையை ஆழப்படுத்தி தருமாறு மீனவர்கள் கோரிக்கை

மன்னார், ஒக்.22

மன்னார் நறுவிலிக்குளம் கடற்கரை இறங்குதுறையை ஆழப்படுத்தித் தருமாறு அந்தப் பகுதி மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அங்கு கடற்தொழிலை வாழ்வா தாரமாகக் கொண்டு பல குடும்பங்கள் வாழ்ந்து வருகின்ற நிலையிலேயே இந்தக் கோரிகை விடுக்கப்பட்டுள்ளது.

இவர்கள் மீன் பிடிக்க கடலில் செல்வதற்கு கரையிலிருந்து 250 மீற்றருக்கும் அதிகமான தூரம் வரை படகுகளை மிகவும் சிரமப்பட்டு கடலுக்குள் இழுத்துச் செல்ல வேண்டியுள்ளது.

இதனால் கரையிலிருந்து இந்தப் பகுதியை ஆழப்படுத்தி இரு பக்கமும் பாதுகாப்பு



அணை அமைத்துத் தருமாறு நறுவிலிக்குளம் மீனவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

மீனவர்களின் கோரிக்கையை அடுத்து செல்வம் அடைக்கல நாதனின் பணிப்பின் பெயரில் நேரில் சென்று பார்வையிட்ட அவரது பிரத்தியேக செயலா ளர் டானியல் வசந்திடம் நறுவிலிக்குளம் மீனவர்கள் எதிர்நோக்கும் வாழ்வாதாரப் பிரச்சினைகள் தொடர்பிலும் தெரியப்படுத்தியுள்ள னர். (ற-213)



## தலைமைப்பதவிக்கு தயாராகும் நவீன்?

கொழும்பு, ஒக்.22

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப்ப தவிக்கு போட்டியிடவுள்ளதாக நவீன் திஸநாயக்க தெரிவித்துள்ளார். தலை மைப் பதவியில் இருந்து விலகுவதற்கு ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ள நிலையிலேயே தான் இந்த முடிவை எடுத்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள அவர், "ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக யார் இருக்க வேண்டும் என்பதை கட்சியின் செயற்குழுவால் மட் டுமே தீர்மானிக்க முடியாது. கட்சியின் ஆதரவாளர்கள் மற்றும் அனைத்து உறுப்பினர்களின் கருத்தையும் கேட்டு புதிய தலைவரை நியமிக்க முற்பட வேண்டும்." எனக் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வரலாற்றுத் தோல் வியைத் தழுவியது. இதனையடுத்து தலைவர் பதவியில் இருந்து விலகுவதாக ரணில் அறிவித்திருந்தார்.

இதற்கமைய கடந்த மாதம் ருவான் விஜேவர்தன ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய பிரதித் தலைவராக தெரிவுசெய் யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந-இ)

## அதிபர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் ஆலோசனை

கொழும்பு, ஒக்.22

அதிபர் சேவைக்கு இணையாக பணியாற் றும் கடமை நிறைவேற்று பதில் அதிபர்களின் சேவை அனுபவங்களை அடிப்ப டையாகக்கொண்டு அவர்களின் தரங்களை உயர்த்துவதற்கான திட்டங்களை நடைமு றைப்படுத்துவதன் ஊடாக பதில் அதிபர்க ளின் பிரச்சினைக ளுக் குத் தீர்வைப் பெற்றுக் கொடுக்க முடியும் என ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் அவர்கள் கல்வி அமைச் சுக்கு ஆலோசனை முன்வைத்துள்ளார்.

ஊவா மாகாண கல்வி அபிவிருத்தி தொடர்பில் கல்வி அமைச்சர் ஜி.எல் பீரிஸ் தலைமையில் ஊவா மாகாண சபை யில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஆளுநர் இவ் ஆலோசனையை முன் வைத்தார்.

சுமார் 166 பாடசாலைக ளுக்கு அதிபர்கள் இல்லை எனவும், சில பாடசாலைகளில் பதில் அதிபர்கள் சுமார் 10 வருடங்களுக்கு மேல் கடமையாற்றியுள்ளார் கள் எனவும் தெரிவித்த கல்வி அமைச்சர் ஜி.எல் பீரிஸ், இவ்வாறான நிர்வாக பிரச்சினை களைத் தீர்க்க தமது அமைச்சு , நடவடிக்கை களை முன்னெ டுத்துள்ளது எனவும் குறிப்பிட்டார். அத்து டன், இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த, நல்ல பெறுபே றுகளை வெளியிடும் பதில் அதிபர்களுக்கு நியாயத்தைப் பெற்றுக் கொடுக்கவேண்டும் என்பதில் தாம் உறுதி யாக உள்ளோம் எனத் தெரி வித்தார்.

இதனைத் தொடர்ந்து கருத்து வெளியிடுகையி லேயே ஆளுநர் முஸம் மில் மேற்குறித்த ஆலோ சனையைக் கல்வி அமைச்சுக்கு முன்வைத் தார்.

இதன்போது மாகாண சபை அதிகார எல்லைக் குட்பட்ட பாடசாலைக ளில் காணப்படும் அதிபர் ஆசிரியர் பற்றாக் குறை, அடிப்படை வசதிகள், முன்பள்ளி பாடசாலைகளில் நில வும் பிரச்சினைகள் தொடர்பில் அதிகாரிகள் நேரடியாக அமைச்சருக் குத் தெளிவுபடுத்தினர்.

இக் கலந்துரையாடலில் தொழிலாளர் அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா, இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த, தேனுக விதானகே, நாடாளு மன்ற உறுப்பினர்களான சுதர்ஷன டெனிபிடிய, ஷாமர சம்பத் திஸநாயக உள்ளிட்ட அரசியல் பிர முகர்கள், வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், ஊவா பல்கலைக்கழகத்தின் டீன், ஊவா கல்வி அமைச்சின் அதிகாரிகள், மாகாண கல்வி அமைச்சின் அதி காரிகள், அமைச் சுக்களின் அதிகாரிகள், அதிபர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ந-இ)

## கேகாலையில் 23 பேருக்கு கொரோனா

கொழும்பு, ஒக்.22

கேகாலை மாவட்டத்தில் 23 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப் பட்டுள்ளது. கேகாலை மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளர் மருத்து வர் குமார விக்ரமசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, "கேகாலை வைத்தியசா லையின் வெளிநோயாளர் பிரிவில் பணியாற்றும் மூன்று மருத்துவர்களுக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள் ளமை உறுதிசெய்யப்பட்டுள்ளது. அத்துடன் ஒரு மருத்துவரின் கணவர், மகன், மகள் மற்றும் ஊழியர் ஆகியோ ரிரும் கொரோனாத் தொற்றால் பாதிக் கப்பட்டுள்ளனர்" என கேகாலை மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பா ளர் குறிப்பிட்டுள்ளார். (ந-இ)



## ஊரடங்கு விதிமீறல்: 83 பேர் கைது

கொழும்பு, ஒக்.22

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்ட விதிமுறைகளை மீறிப் பயணித்த குற்றச்சாட்டில் கடந்த 24 மணி நேரத்தில் 83 பேர் கைதுசெய்யப்பட் டுள்ளனர். பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன இதனைத் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டவிதிமுறைகளை மீறிப் பயணித்த குற்றச்சாட்டில் இதுவரை 596 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அத்துடன் குறித்த காலப்பகுதியில் ஊரடங்கு சட்டவிதிமுறைகளை மீறிப் பயணித்த 76 வாகனங்களும் கைப்பற் றப்பட்டுள்ளன. (ந-இ)

## வவுனியாவில் மூடப்பட்டன வியாபார நிலையங்கள்

வவுனியா, ஒக்.22

வவுனியாவில் கொரோனாத் தொற்றாளர்கள் பயணித்த வியாபார நிலையங்கள் மூடப்பட் டுள்ளன.

வவுனியா நெடுங்கேணியில் வீதி அபிவிருத்தி பணியில் ஈடுபட்ட வெளி மாவட்டத்தைச் சேர்ந்த மூவருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டிருந்த நிலையிலேயே இந்த வியாபார நிலையங்கள் மூடப்பட்டுள் ளன. அந்தவகையில் அவர்கள் சென்று வந்தனர் எனத் தெரிவிக்கப்படும் வேப்பங்கு ளம் பகுதியில் அமைந்துள்ள சிற்றி ஹாட்வெ யார், பழைய பேருந்து நிலையத்தில் அமைந் துள்ள கஜன் புத்தக நிலையம் மற்றும் விநாய கர் மரக்காலை என்பன தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.

தொற்று ஏற்பட்டவர்களுடன் தொடர்புகளைப் பேணிய ஏனைய ஊழியர்களுக்கு இன்று பி.சி.ஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப் பட வுள்ளதுடன், அவர்களுடன் நெருங்கிப் பழகியவர்கள் தொடர்பான தகவல்களும் சுகாதாரப்பிரிவினரால் சேகரிக்கப்பட்டு வருகின்றன. (ற-110)







# வவுனியாவில் டெங்கு அபாயம்

வவுனியா, ஒக்.22

வவுனியா புதிய பேருந்து நிலையம் முன்பாக டெங்கு பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று பயணிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். இந்த புதிய பேருந்து நிலையம் முன்பாக உள்ள கழிவு வாய்க்காலில் கழிவு நீர் வழிந்தோடாது தேங்கி நிற்பதுடன், இந்தக் கழிவு வாய்காலில் வெற்றுப் போத்தல்கள், பொலித்தீன் பைகள் என்பனவும் நீண்ட நாள்களாக அகற்றப்படாது பரவலாக காணப்படுகின்றன.

இதன் காரணமாக அந்தப் பகுதியில் நுளம்புகளின் பெருக்கம் அதிகமாகவுள்ளது என்றும், டெங்கு நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்றும் பயணிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

பொதுமக்கள், பேருந்து சாரதிகள், நடத்துநர்கள், முச்சக்கர வண்டி ஒட்டுனர்கள், பொலிஸார் எனப் பலர் தினமும் வந்து செல்லும் இப்பகுதி இவ்வாறு காணப்படுகின்றமை குறித்து பலரும் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் பிராந்திய சுகாதார பணிமனையின் மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் ரி.தியாகலிங்கத்தை தொடர்பு கொள்ள முயற்சித்த போதும் பதில் எதுவும் கிடைக்கவில்லை.

இவ்வாறானவர்களின் பொறுப்பற்ற செயற்பாடே டெங்கு நோய் தற்போது பரவலடையக் காரணம் எனவும் மக்கள் மேலும் விசனம் தெரிவித்துள்ளனர். (ற-18)

## போதை மாத்திரைகளுடன் பெண் கைது



கொழும்பு, ஒக். 22

பிரான்ஸிலிருந்து இலங்கைக்கு அனுப்பப்பட்ட ஒரு தொகை போதை மாத்திரைகளுடன் பெண்ணொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

20 மில்லியன் ரூபா பெறுமதியான மெதம்படமைன் எனப்படும் ஒரு வகை போதைப்பொருளை மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து, தபால் மூலம் இலங்கைக்கு அனுப்பப்பட்டிருந்ததாகவும் இதனைப் பெற்றுக்கொள்ள வருகைத் தந்த பெண்ணொருவரே சுங்கத் திணைக்களத்தின் போதைக் கட்டுப்பாட்டு பிரிவு அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்றும் தெரியவருகின்றது. (ம-இ)

## மருந்து விநியோகம் மீண்டும் ஆரம்பம்

கொழும்பு,ஒக்.22

கொழும்பு, கம்பஹா மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் நோயாளிகளுக்கான மருந்துகளை விநியோகிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மத்திய தபால் பரிமாற்றகத்தின் தபால் அத்தியட்சகர் அஸ்லாம் ஹசன் இதனைத் தெரிவித்துள்ளார். வைத்தியசாலைகள் மற்றும் அரச மருந்தகங்களில் வழங்கப்படும் மருந்துகள் இவ்வாறு விநியோகிக்கப்படுகின்றன என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ந-இ)

## கொன்சுலர் சேவைகள் தற்காலிகமாக நிறுத்தம்

கொழும்பு, ஒக்.22

வெளிநாட்டு அமைச்சின் கொன்சுலர் சேவைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன என்று வெளிநாட்டு அமைச்சு தெரிவித்துள்ளது.

பொதுமக்கள் ஒன்றுகூடுவதைத் தவிர்த்து, கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்கும் முகமாக, அமைச்சின் கொன்சுலர் விவகாரங்கள் பிரிவால் வழங்கப்படும் அனைத்துச் சேவைகளையும் மறுஅறிவித்தல் வரை இடைநிறுத்துவதற்கு வெளிநாட்டு அமைச்சு தீர்மானித்துள்ளது.

அந்தவகையில் கொழும்பிலுள்ள சிலின்கோ கட்டடத்தில் அமைந்துள்ள கொன்சுலர் விவகாரங்கள் பிரிவு 'ஏற்றுமதி ஆவணங்களை' சான்றுறுதிப்படுத்திக் கொள்வதற்காக பிரிவுக்கு வருகை தரும் ஏற்றுமதியாளர்கள் உள்பட பார்வையாளர்களுக்காக மறுஅறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளது. அத்துடன் மாத்தறை மற்றும் யாழ்ப்பாணத்திலுள்ள பிராந்திய கொன்சுலர் அலுவலகங்களால் மேற்கொள்ளப்படும் ஆவணச் சான்றளிப்பு சேவைகளும் மறு அறிவித்தல் வரை வழங்கப்படமாட்டாது என்றும் வெளிநாட்டு அமைச்சு தெரிவித்துள்ளது.

வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களின் இறப்புக்கள் மற்றும் இறப்பு தொடர்பான ஆவண உதவிகள் சார்ந்த கோரிக்கைகளுக்கு 0776032252, 0773586433, 0718415623, 0701428246 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடனும், 0112446091 / 0112333450 ஆகிய தொலைநகல் இலக்கங்களுடனும் cypher@mfa.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரியுடனும் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-இ)

## கொரோனாவிலிருந்து விடுபட பிரார்த்தனை செய்யுங்கள்

### வடக்கு, கிழக்கு ஆயர்கள் மன்றம் வேண்டுகோள்

மன்னார், ஒக்.22

உலக நாடுகள் கொரோனா நோயிலிருந்து விடுபட வேண்டி, நாளைமறுதினம் சனிக்கிழமை வடக்கு, கிழக்கு மறைமாவட்ட மக்கள் ஒன்றாக இணைந்து மரியன்னையிடம் சிறப்பாக வேண்டும்படி வடக்கு, கிழக்கு ஆயர் மன்றம் தங்கள் மறைமாவட்ட இறை மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

தற்பொழுது கொரோனாத் தொற்று மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தையும் பாதிப்பையும் ஏற்படுத்தி வருகின்றது. இந்த நிலையில் இந்த மாதம் கத்தோலிக்க மக்களால் சிறப்பாக நினைவு கூரப்பட்டு வருகின்றது. இந்த நிலையில் 'உலக நாடுகள் கொரோனாத் தொற்றிலிருந்து விடுதலைபெற ஒன்றாக இணைந்து பிரார்த்தனை செய்வோம்' என்று வடக்கு, கிழக்கு ஆயர்கள் மன்றம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்த வேளையில் சுகாதார நடைமுறைகளை மனதில் இருத்தி ஒவ்வொருவரும் தங்கள் இல்லங்களில் இருந்தவாறே பிரார்த்தனை செய்யும்படி வேண் டப்பட்டுள்ளனர். (ற-60)

## கொரோனா தொடர்பில் மக்களுக்கு விழிப்புணர்வு

சாவகச்சேரி,ஒக்.22

தென்மராட்சி பிரதேசத்தில் தினமும் மாலை வேளைகளில், பொலிஸார் கொரோனாத் தொற்று தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். பிரதேச உதவிப் பொலிஸ் அத்தியட்சகரின் பணிப்பின் பேரில், சாவகச்சேரி மற்றும் கொடிகாமம் பொலிஸாரால் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மக்கள் கூடும் இடங்களில் கொரோனாத் தொற்று தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகளை ஒலிபெருக்கி மூலம் பிரசாரம் செய்து வருகின்றனர்.(க-9)

## பேலியகொட சந்தைக்குச் சென்ற நான்கு பொலிஸார் தனிமையில்

கொழும்பு, ஒக்.22

பேலியகொட மீன் சந்தைக்கு வருகைதந்த நான்கு பொலிஸ் அதிகாரிகளை தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்துமாறு பணிக்கப்பட்டுள்ளது. சந்தையில் 46 வர்த்தகர்கள் உட்பட 49 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதையடுத்து இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (வ-இ)

## பயிற்சி வேலைத்திட்டம் தற்காலிகமாக நிறுத்தம்

கொழும்பு, ஒக்.22

அரச சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ள பட்டதாரிகளுக்கான பயிற்சி வேலைத்திட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

அரச சேவை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. கொரோனாத் தொற்றைக் கருத்திற்கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை அரச சேவைகளுக்கான பயிற்சிகளில் 50 ஆயிரம் பட்டதாரிகள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இவர்களை பிரதேச செயலகங்களுக்கு அழைக்கும்போது, சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுமாறு அரச சேவை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதேவேளை, இவர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-இ)

# அமெரிக்க செயலாளர் விஜயம் மேலும் முன்னேற்றத்தை வழங்கும்

## அமெரிக்க இராஜாங்க திணைக்களம் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.22

சுதந்திரமான வெளிப்படையான இந்தோ - பசுபிக் பிராந்தியம் குறித்த இரு நாடுகளினதும் பொதுவான இலக்குகளில் மேலும் முன்னேற்றத்தை காண்பதற்காகவே அமெரிக்க இராஜாங்க செயலாளர் மைக் பொம்பியோ இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார் என அமெரிக்க இராஜாங்க திணைக்களம் தெரிவித்துள்ளது.

அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் பேச்சாளர் மோர்கன் ஓர்டகஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளார்.

வலுவான இறையாண்மையுள்ள இலங்கையுடனான கூட்டு செயற்பாடு குறித்த அமெரிக்காவின் அர்ப்பணிப்பை வெளிப்படுத்துவதற்கு இந்த விஜயம் உதவும் என அவர் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கை வரும் அமெரிக்க இராஜாங்க செயலர் 28ம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ள இரு நாடுகளுக்கான இரு தரப்பு பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத் தக்கது. (ந-இ)



## ஊரடங்கு அனுமதியாக கடமைக் கடிதம் ஏற்கப்படும்

### பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அறிவிப்பு

கம்பஹா, ஒக்.22

ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள இடங்களில் உயர்தரப் பரீட்சை நடவடிக்கைகளை கண்காணிக்கும் மேற்பார்வையாளர் மற்றும் இந்த பணியில் ஈடுபட்டுள்ள ஏனைய அரச ஊழியர்கள் தங்களது கடமைக் கடிதத்தை ஊரடங்கு அனுமதியாகப் பயன்படுத்த முடியும். இதனை பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹன குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஊரடங்கு உத்தரவு விதிக்கப்பட்டுள்ள கம்பஹா மாவட்டத்துக்குள் எந்த வாகனத்தையும் நிறுத்த அனுமதி வழங்கப்படமாட்டாது. எனினும் இந்த ஊரடங்கினால் மகப்பேறு பெண்கள் மற்றும் உயர்தர பரீட்சை எழுதும் பரீட்சார்த்திகள் பாதிக்கப்பட மாட்டார்கள். கம்பஹா மாவட்டத்துக்குள் நீர், மின்சாரம், தொலைத்தொடர்பு, விமான நிலைய சேவைகள் மற்றும் ஊடகங்கள் போன்ற அத்தியாவசிய சேவைகள் பாதிக்கப்படாது. ஊரடங்கு உத்தரவுகளை மீறுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார். (வ-இ)

## அத்தியாவசிய தேவையிருந்தால் மட்டும் ரயிலில் பயணியுங்கள்

### பொதுமக்களிடம் கோரிக்கை

கொழும்பு, ஒக்.22

அத்தியாவசிய தேவைகளுக்காக மாத்திரம் ரயில்களைப் பயன்படுத்துமாறு ரயில்வே கட்டுப்பாட்டு பிரிவு பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது. நாட்டில் கொரோனாப் பரவல் தீவிரம் அடைந்துள்ளமையால் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது. ரயிலில் பயணிப்பவர்கள் சுகாதாரப் பாதுகாப்பு நடவடிக்கைகளை உரிய முறையில் பின்பற்ற வேண்டும் என பிரதான பாதுகாப்பு அதிகாரி அனுர பிரேமரத்ன தெரிவித்துள்ளார்.

மேலும் பயணிகளின் எண்ணிக்கை குறைவாக உள்ளமையால் நகரங்களுக்கு இடையிலான சில ரயில் சேவைகள் தற்போது இரத்து செய்யப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (வ-இ)



## சட்டவிரோத மண்ணகழ்வு ஆறு பேர் மடக்கிப்பிடிப்பு

வடமராட்சி, ஒக். 22

பருத்தித்துறை - துன்னாலைப் பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். சிறப்பு அதிரடிப்படையின் சுற்றிவளைப்பின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்கள் 25 தொடக்கம் 40 வயதுவரை உடையவர்கள். மணல் அகழ்வுக்குப் பயன்படுத்தப்பட்ட மூன்று டிப்பர்க ளும் பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-26)

## கருவாடு வர்த்தக சங்கத்தின் முன்னெச்சரிக்கை நடவடிக்கை

கொழும்பு, ஒக்.22

கொரோனாவிலிருந்து பாதுகாப்பு பெறும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக புறக்கோட்டை கருவாடு வர்த்தகர் சங்கம் இன்று முதல் கடையடைப்பில் ஈடுபடவுள்ளது என அறிவித்துள்ளது.

இது தொடர்பில் அச்சங்கத்தின் தலைவர் பியோனஸ்ட் பெர்னாண்டோ தெரிவித்துள்ளதாவது, எங்கள் உறுப்பினர்களில் சிலரை சுய தனிமைப்படுத்தப்பட வேண்டும் என்று கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தினர் அறிவுறுத்தியுள்ளனர்.

எங்கள் அரசாங்கத்தை ஆதரிப்பதும், உங்கள் குடும்பத்தினரையும் ஊழியர்களையும் நினைவில் கொள்வதும் எங்கள் கடமையாகும். அவர்கள் உங்களை அழைக்கும்போது பி.சி.ஆர் சோதனைக்கு செல்லுங்கள். இன்று முதல் ஞாயிற்றுக் கிழமை வரை உங்கள் வணிகத்தை மூடிவிட்டு, உங்கள் வீட்டில் சுயமாகத் தனிமைப்படுத்திக் கொள்ளுமாறு எங்கள் சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் நாங்கள் பரிந்துரைக்கிறோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)



# 13 மாவட்டங்களுக்கு பரவியது கொரோனா

## தொற்று நோயியல் பிரிவு

கொழும்பு,ஒக்.22

தற்போது 13 மாவட்டங்களுக்கு கொரோனாத் தொற்று வேகமாக பரவியுள்ளது. இந்த நிலைமை இன்னும் அதிகரிக்கலாம் என்று தொற்றுநோயியல் நிபுணர் மருத்துவர் சுதத் சமரவீர எச்சரித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கொரோனா தொற்றுக்குள்ளான நோயாளர்கள் சிலர் பேலியகொடை மீன் சந்தைக்கு வந்து சென்றனர் என்ற அடிப்படையில் பலருக்கு பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தொற்று பரவல் ஏற்பட்டிருக்கக்கூடும் என்ற சந்தேகத்தில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. 49 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த இடத்துக்கு நாட்டின் பல பகுதிகளில் இருந்து மீன் வர்த்தகர்கள் மீன்களைக் கொண்டு வருகின்றனர். அதேபோல் மீன்களைப் பெற்றுச் சென்று விற்பனை செய்கின்றனர். இதன் காரணமாக நோய்த்தொற்றுப் பரவியிருந்தால் அது




பல மாவட்டங்களில் பரவி இருக்கக்கூடும்.

மினுவாங்கொட தொற்றாளர்கள் அதிகமாக கம்பஹா மாவட்டத்தில் பதிவாகியுள்ளனர்.

எனினும் குருணாகல், புத்தளம், கேகாலை, கண்டி, காலி, அம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம், வவுனியா, அநுராதபுரம்,பொலநறுவை மற்றும் மொனராகலை ஆகிய 13 மாவட்டங்களிலும் நோய்த் தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர். மீன் சந்தை நோயாளர்களின் பரவல் காரணமாக இந்த எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கக் கூடும். என்றார். (க-இ)

# கொரோனாத் தடுப்பூசிக்கு 184 நாடுகள் பங்களிப்பு

## உலக சுகாதார அமைப்பு அறிவிப்பு



ஜெனிவா, ஒக்.22

உலக சுகாதார அமைப்பு தயாரிக்கவுள்ள இக்வெக்ஸ் கொரோனாத் தடுப்பூசிக்கு 184 நாடுகளின் பங்களிப்பு க்கள் கிடைத்துள்ளன என அவ்வமைப்பு அறிவித்துள்ளது. கொரோனாவுக்கு எதிரான தடுப்பூசியைத் தயாரிப்பதற்கும் அதனை விநியோகிப்பதற்குமான பொறுப்பை உலக சுகாதார அமைப்பும் யுனிசெப் அமைப்பும் ஏற்றுள்ளன.
இதற்கு தேவையான நிதி ஒதுக்கீடுகளை இக்வெக்ஸ் அணியின் 184 உறுப்பு நாடுகள் ஊடாக பெறப்படும்.
உலக வல்லரசுகள் மற்றும் மிகவும் வறுமைக்கு உட்பட்டுள்ள நாடுகளில் மிகவும் நியாயமான முறையில் இத்தடுப்பூசியை விநி யோகிப்பதே எமது நோக்கம் என உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் எட்னோம் தெரிவித்துள்ளார்.
கொரோனா வைரசுக்கு எதிராக தயாரிக்கப்படும் தடுப்பூசியில் இரண்டு பில்லியன் தடுப்பூசிகளை 2021ஆம் ஆண்டளவில் உலகம் முழுவதும் 170 நாடுகளுக்கு விநியோகிக்க முடியும் என யுனிசெப் அமைப்பு அறிவித்துள்ளது. இதேவேளை ஐரோப்பிய சங்கத்துக்குரிய நாடுகள், சீனா, லத்தீன் அமெரிக்கா, தென்னாபிரிக்கா மற்றும் ஈரான் , ஈராக் உள்ளிட்ட 184 நாடுகள் இக்வெக்ஸ் குழுவுக்கு நிதிப் பங்களிப்பை வழங்குவதுடன் இதில் தொடர்புபடுவதற்கு தனக்கு எவ்வித எண்ணமும் இல்லை என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது. (வ-இ)



## கொரோனாவை அழிக்கும் வாய் சுத்திகரிப்பு திரவங்கள்

நியூயோர்க், ஒக்.22

வாயை சுத்திகரிக்கும் திரவங்கள் மற்றும் குழந்தைகளுக்கான ஷம்போ என்பன வாய் மற்றும் மூக்கில் உள்ள கொரோனா வைரஸ் கிருமிகளை அழிக்கின்றன என ஆய்வில் தெரிவிக்கப்பட் டுள்ளது.
அமெரிக்காவின் பென்சில்வேனியாவில் உள்ள நுண்ணுயிரியல் மற்றும் மகப்பேறியல் மருத்துவரான கிரேக் மேயர்ஸின் ஆய்வறிக்கையில் இதுதொடர்பில் கூறப்பட்டுள்ளது.
இது தொடர்பில் பேராசிரியர் கிரேக் மேயர்ஸ் தெரிவித்துள்ளதாவது:
ஒரு தடுப்பூசி உருவாக்கப்படுவதற்காக நாங்கள் காத்திருக்கும்போது, பரவுதலைக் குறைப்ப தற்கான முறைகள் தேவை.
நாங்கள் பரிசோதித்த தயாரிப்புகள் உடனடியாகக் கிடைக்கின்றன.
மேலும் அவை ஏற்கனவே மக்களின் அன்றாட நடைமுறைகளின் ஒரு பகுதியாக உள்ளன எனத் தெரிவித்துள்ளார். (வ-இ)



### ஒரு வருடமாக குளிரூட்டியில் வைத்த நூடில்ஸை உண்ட குடும்பத்துக்கு

## நேர்ந்த துயரம்

சீனாவில் ஒரு வருடமாக குளிரூட்டியில் பாதுகாக்கப்பட்ட நூடில்ஸை சமைத்து சாப்பிட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 9 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

சீனாவின் வடகிழக்கு மாகாணமான ஹீலோங்ஜியாங் மாகாணம் ஜிக்சி நகரில் ஒரு வீட்டில் புளித்த சோள மாவு கலந்த வீட்டில் தயாரித்த நூடில்ஸ் உணவானது கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக குளிரூட்டியில் வைக்கப்பட்டிருந்தது. இந்த உணவை ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 9 பேர் சமைத்து உண்டனர்.

இந்த உணவை உண்ட 8 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பயனின்றி இறந்துள்ளனர். இன்னொருவர் மருத்துவ சிகிச்சையில் குணமடைவார் என எதிர்பார்க்கப்பட்டு வந்த நிலையில், கடந்த திங்களன்று உயிரிழந்துள்ளார்.

சூடோமோனாஸ் கோகோவெனான்கள் என்ற பக்டீரியத்தால் உற்பத்தி செய்யப்படும் சுவாச நச்சுத்தொகையான போங்க்ரெக்கிக் அமிலத்தின் அதிக செறிவு சோள நூடில்ஸிலும், நோய்வாய்ப்பட்டவர்களின் இரைப்பை திரவத்திலும் கண்டறியப்பட்டது என மாகாண சுகாதார ஆணையம் தெரிவித்துள்ளது. இதனாலேயே இவர்கள் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. பொதுவாக சோள மாவில் தயாரிக்கப்ப டும் நூடில்ஸ் உணவானது, குறிப்பிட்ட நாள்களுக்குப் பிறகு ஒரு வகை ரசாயனத்தால் கெட்டுப் போகும் எனவும் குறிப்பிட்டுள்ளனர்.



## சிறைச்சாலை மீது தாக்குதல்; 1300 கைதிகள் தப்பியோட்டம்

கொங்கோ ஜனநாயக குடியரசில் அமைந்துள்ள சிறைச்சாலையொன்றில் இருந்து குறைந்தது. ஆயிரத்து 300 கைதிகள் தப்பிச் சென்றுள்ளனர் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

கொங்கோவின் வடக்கு கிவ் மாகாணத்தின் பெனியில் உள்ள கொங்பாய் மத்திய சிறைச்சாலை மீது செவ்வாய்க்கிழமை அதிகாலை 4 மணியளவில் இஸ்லாமிய கிளர்ச்சியாளர்கள் மேற்கொண்ட தாக்குதல் காரணமாவே இந்தச் சம்பவம் பதிவாகியுள்ளது. கொங்பாய் மத்திய சிறைச்சாலை மீதும், அதற்கு பாதுகாப்பு அளிக்கும் இராணுவ முகாமின் மீதும் ஒரே நேரத்தில் நடத்தப்பட்ட தாக்குதலைத் தொடர்ந்து சிறைச்சாலையில் சுமார் 100 பேர் மட்டுமே எஞ்சியிருந்தனர் என நகர மேயர் மொடெஸ்டே பக்வன மஹறா சுட்க்காட்டியுள்ளார். (வ-இ)



## சன நெருக்கடியில் சிக்கி 15 ஆப்கானியர்கள் சாவு

காபூல், ஒக்.22

ஆப்கானிஸ்தானின்கிழக்கு நகரமானஜலாலாபாத்தில் ஏற்பட்ட சன நெருக்கடியில் சிக்கி 15 பேர் உயிரிழந்துள்ளனர்.
ஜலாலாபாத்தில் அமைந்துள்ள பாகிஸ்தான் தூதரகத்துக்கு வெளியே விசாக்கு விண்ணப்பிக்கக் கூடியிருந்த ஆயிரக்கணக்கான நபர்களுக்கிடையே ஏற்பட்ட நெரிசல் காரணமாக இந்த உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன.
அதன்படி விசாவுக்கு விண்ணப்பிக்க தேவையான டோக்கன்களை சேகரிக்க சுமார் 3,000 ஆப்கானியர்கள் தூதரகத்துக்கு வெளியே திறந்த வெளியில் கூடியிருந்தனர் என மதிப்பிடப்பட்டுள்ளது. (வ-இ)

